மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# The Ethics of Life as Shown by short stories of Andal Priyadarshini

**S. Rexlin Parimala**

**Part-time Research Scholar, Department of Tamil, SRM University, Kattankulathur, India**

Manuscript ID : **MT213A0117**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 15.01.2023
Revised: 07.02.2023
Accepted: 01.03.2023
Published: 04.03.2023

Pages : 88-92

DOI: 10.5281/zenodo.7697684



**ABSTRACT:**

The research paper tries to pen down the social ethics and rational ideas evinced by the poet Andal Priyadarshini. She is the one of the righteous women of the Tamil origin. Her stories focus on the themes such as love on humanity, education, discipline, morale, hospitality, friendship, charity and other related values and the virtues for woman to foster ethical life. Hence, the article traces the virtues of life in an integrated manner.

**KEYWORDS:**

Andal Priyadarshini, Short Stories, Ethics of Life, Ethics of Love, Ethics, Education, Professional Ethics, Morality

# ஆண்டாள் பிரியதர்ஷினியின் கதைகள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

**சூ. ரெக்ஸிலின் பரிமளா**
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம். காட்டாங்குளத்தூர், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**இன்றைய இலக்கிய உலகில் வாழும் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி பன்முகப் படைப்பாளராகப் போர்க்குணம் கொண்டு ரௌத்திரம் பழகு, பெண்கள் கல்வி கற்க வேண்டும், எல்லா துறைகளிலும் பெண்கள் பலமான எழுச்சியுடன் எச்சூழலிலும் வீறுநடை போடவேண்டும், பெண் சுதந்திரம், பெண் விடுதலை இருந்தாலும் மாற்றம் வேண்டும், அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும் என தம் படைப்புகள் வழி தீப்பொறி பறக்க அன்றும் இன்றும் பாரதி, பாரதிதாசன், பெரியார் வழியில் புதுமைப்பெண்களை உருவாக்குவோம் என்று விளிம்பு நிலை மாந்தர்களின் வாழ்வியலை மையமிட்டுள்ள இவரது கருத்துகள் மக்கள் விழிப்புணர்வு, தயக்கமின்மை, பெண்கல்வி பெற்று செயல்வடிவம் பெறுதல், குறிப்பாக மனதளவில் பெண்கள் வலிமையோடு முன்னேற்றமடைவதற்கு வழிகாட்டும் வாழ்வியல் நெறிகளை படம் பிடித்துக் காட்டுவதே, கதைகளில் கதை மாந்தர்களை கற்பனை நயத்தோடு நம் மனக்கண் முன் பெண் மக்களைக் கொண்டே நிர்ணயப்படுத்துகின்றார். ஆ.பியின் சிறுகதைகளில் அன்றாட வாழ்வியல் நெறிமுறைகள் செறிந்து காணப்படுகின்றன.**

## கருச்சொற்கள்

**ஆண்டாள் பிரியதர்ஷினி, வாழ்வியல் நெறிமுறைகள், அன்பு நெறி, அறநெறி, கல்வி, ஒழுக்க நெறி, தொழில் நெறி**

## முன்னுரை

இன்றைய நாகரிக வளர்ச்சியில் வாழ்வியல் மனிதம் மறந்து மானிடர் வாழும் இவ்வுலகில் எளிதாக ஏற்கக்கூடிய வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. அன்பு, உறவுநிலைகள், கீழ்த்தட்டு, நடுத்தர, மேல்தட்டு மக்கள் உணவு உடை உறையுள், பல்வகைத் தொழில்கள், பொருளாதார நிலை, விருந்தோம்பல், மனிதநேயம், குடும்பம், கல்வி, பெண், சமூகத்தின் மாற்றத்தை அவர்களது வாழ்வின் யதார்த்தத்தை மிக நுட்பமாக சித்தரித்துக் காட்டுவது ஆ.பியின்

சிறுகதைகள். நெல்லை ஈன்ற இலக்கியப் பெண் வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஊன்றுகோல் துப்பாக்கியல்ல புத்தகம் என பேனா முனை வழி விளிம்பு நிலை மாந்தரும் சுதந்திர மனிதர்களாக வாழ வாழ்வியல் அவலங்களையும் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக்கூறும் தன்மையைக் கண்டறிவதே இக்கட்டுரை ஆகும்.

## வாழ்வியல் நெறிமுறைகள்

தனிமனித உணர்ச்சி வெளிப்பாடுகளின் முரண்பாடுகளான முனைப்பை மழுங்கடிக்கவும், மாற்றவும், நீக்கவும் நம் ஆன்றோர்களும், சான்றோர்களும் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றி உருவாக்கிய செயல்முறைகளே வாழ்வியல் நெறிகளாகும். மனித இனத்தின் வாழ்க்கை அமைதியாகவும், செம்மையாகவும், பயனுள்ளதாகவும் அமைய நம் முன்னோர்கள் வகுத்த வாழ்வியல் கோட்பாடுகளே வாழ்வில் நெறிமுறைகள் எனலாம். ஒவ்வொருவரும் தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் தனக்கென்று சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும், ஒழுக்கங்களையும் வகுத்துக் கொண்டு தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகள் ஆகி விடுகின்றன.

## அன்பு நெறி

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு”** **குறள்.** 72

அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருட்களும் தமக்கே சொந்தம் என்பர். அன்புள்ளவர்கள் தம் உயிரும், உடம்பும்கூட மற்றவர்க்காக வாழ்வார்கள் என்று குறள் கூறுகிறது. ஆ.பி. அவர்கள் தமது படைப்புலகத்தில் சிறுகதைகள் வாயிலாக தன் அனுபவங்களையும், நடப்பனவற்றையும் இரக்கம், நட்பு, அன்பு, நேசம், தாம்பத்தியம், காதல், துக்கம் போன்ற ஏராளமானக் கருவினைக் கையாண்டு பெண்களுக்கும், சமூகத்திற்கும் ஊக்கம் கொடுக்கும் அருமருந்தாக ஆக்கித் தந்துள்ளார் என்பதை நன்கு அறிய முடிகிறது.

## அறநெறி

“அறவழியில் பொருளீட்டித் தானும் இன்புற்றுப் பிறர்க்கும் ஈந்து அவர்களையும் இன்புற்று வாழ வைப்பதே தமிழனின் வாழ்க்கை நெறி எனச் சுருங்கச் சொன்னால், வாழ்தலும் வாழச் செய்தலும்” என்று (பழ. முத்து வீரப்பன் இலக்கிய வளம் ப.1) குறிப்பிடுகிறார். அறம் எனப்படுவது உலகில் வாழும் உயிர்களுக்கு உணவும் உடையும் இருக்க இடமும் தருவது என்கிறது மணிமேகலை. உயிர்களின் பசிப்பிணி போக்குதலே

அறங்களில் தலையாய அறம் என வள்ளுவம், உலக உயிர்களின் தேவைகளுள் முதன்மையானது உணவு, உணவுக்காக உலகு தோன்றிய நாள்முதல் கீழ்த்தட்டு, நடுத்தர, மேல்தட்டு மக்களின் வாழ்வியல் அமைவதை ஆ.பி. சிறுகதைகள் எடுத்துக்காட்டுவதை அறியலாம்.

## கல்வி

"பெண் பாரதி" ஆண்டாள் பிரியதர்ஷினி நாட்டின் எதிர்காலம் இளைஞர், பெண்கள் கையில் இருப்பதை வானவில் வாழ்க்கை, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கதைகள் வழி கல்விச்செல்வமே நிலையான செல்வம், பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது எனும் கருத்தை உணர்த்துவதற்காக மாணவிக்கு அறிவுரை, கல்வி கற்பதற்கு துணை செய்பவர் எனும் கதை பாத்திரங்கள் வழி உணர்த்தியுள்ளார். படைப்புகள் வழி கூறிய அறிவுரை மற்றும் அறவுரை வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு அடிக்கோடிட்டதாக அமைந்தது என்று நமக்கெல்லாம் நம்பிக்கை ஊட்டுகிறார்.

## ஒழுக்க நெறி

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்"** **குறள்.** 138

மனித வாழ்க்கையை முறையாக வளப்படுத்தி, சிறந்த மனிதனாக மாற்ற கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று ஒழுக்கமே.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** **குறள்.** 131

ஒழுக்கத்தினால் மட்டுமே தகுதியும் பதவியும் பெருமைகளும் பெற முடியும், அதனை உயிர் போல காக்க வேண்டும் என்பதை 'தோஷம்', 'தீ', 'வலி', 'பரிகாரம்', 'வார்த்தை', 'வாய்மை இடத்த' போன்ற சிறுகதைகளின் கதைபாத்திரம் மூலமாக ஒரு செயல் அவர்களது ஒழுக்கத்தினால் மட்டுமே போற்றப்படுகின்றது என்று கூறுகின்றார்.

## தொழில் நெறி

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பார். மெய்வருத்தம் கருதி உலக மக்கள் பல தொழில்களை செய்து வருகின்றனர். "மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையானது பொருள் சேர்த்தலாகும். ஒரு நாடு அல்லது ஒரு மனிதன் பொருளினைச் சேர்க்க அயராது உழைக்க வேண்டும். அதன் மூலம் அவன் வளர்ச்சி அடைய முடியும். இதற்கு அவன் திறமையுடன் நேர்மையான சிந்தனையை பொருளினைச் சேர்க்க

வேண்டும். பிணம் எரிக்கும் தொழிலில் இளம்பெண்கள், சிறுவர்கள், அத்தொழிலில் அனுபவம், நேர்மை, போட்டி, ஏற்படும் பாதிப்புகள், நோய்கள், மலம் அள்ளுதல், செருப்பு தைப்பவர், அரசுப்பணி, பாலியல் தொழில், மரமேறுதல், பெண்கள் கடலுக்குள் இறங்கி பாசி எடுத்தல், பத்திரிகையாளர், டீக்கடைக்காரர், திரைப்பட இயக்குநர் போன்ற தொழில்களையும் உணவின்றி எந்த உயிரும் உயிர் வாழ முடியாது. உயிர்களை வாழ வைக்கும் உணவு மக்களுக்கு கிடைக்க உதவும் விவசாயம் குறித்த செய்திகளையும் கதைகளில் வெளிப்படுத்தியமை காண முடிகிறது.

## இல்லற நெறி

ஆணும் பெண்ணும் சேர்ந்து அன்பு சார்ந்து, அறத்தின் வழியில் நடத்துவது தான் இல்லறம். “அன்பும் இரக்கமும் பாசமும் கொண்டு உறவுகளை மதிக்கவும், ஒற்றுமையோடு வாழவும், ஏற்றத்தாழ்வுகள் நீங்கவும், விட்டுக் கொடுத்து வாழ்வதுமான இல்லறமே அடித்தளம். “பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (வெள்ளைவாரணர் 1983) என தொல்காப்பிய நூற்பா காட்டுகின்றது. உலகளாவிய பண்பாட்டு நிறுவனமாகவும், மனித இனத்தின் வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்வதாக இல்லறம் அமைகிறது. கூட்டுக்குடும்ப, தனிக்குடும்ப புரிதல், ஆதரவு, உறவு நிலைகள், மாறும் நிலைகள் என்று நெஞ்சில் பதிய வைக்கும் பாத்திரங்களை சிறுகதைகளில் காட்சிப்படுத்தியமை அறிய முடிகிறது.

## ஈகை நெறி

ஈகை எனும் அறம் செய்தலே இல்லறத்தில் மாசில்லாத தூய்மையான புகழைத் தரும். கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று (புலியூர்க்கேசிகன் 2010). உதவுதலின் பெரும்பகுதியே ஈகை. ஏழைகளின் பசியும் வறுமையும் கொடுமைகள் நிறைந்தது என்பதை ‘கோரைப்புற்களின் கோரைப்பற்கள்’ சிறுகதை வாயிலாக வெளிப்படுத்தி உள்ளார். “கொடிது கொடிது வறுமை கொடிது. அதனினும் கொடிது இளமையில் வறுமை” என்பதை “தெனமும் அஞ்சாறு பொணமாவது விளுந்தாத்தான் எங்களுக்கு நல்லது. விழணும்னு வேண்டிட்டுத்தான் கண்ணு முழிக்கோம்” அடுத்தவன் சாவுல உசிரு வாழ்றது கொடுமை (ஆண்டாள் பிரியதர்ஷினி 2009) என்பதிலிருந்து உழைப்பதையே உன்னதமாகக் கருதுவதும், ஏழையின் நிலையறிந்து “கேட்கும் முன் கொடுத்துவிட வேண்டும்” என்பதும் அறிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

நவீன உலகில் மற்றவர்களுக்கு நேருவது என்னவென்று தெரியாத வாழ்க்கைச் சூழலில், எல்லா உயிர்களிடமும் அன்பு, இரக்கம், நட்பு, உதவி செய்தல், ஒழுக்கம், கல்வி, விருந்தோம்பல் போன்ற அறச்செயல்கள் வழி நடக்க வேண்டும். மனிதர்களுக்கு மனிதர் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதம் மாண்புற வேண்டும். பிற உயிரையும் தன் உயிர் போல் என்னும் மனித நேயம் மலர ஒருவருக்கொருவர் உதவிச் செய்து வாழும் முறைகள் வளர வேண்டும். வாழ்வியல் நெறிமுறைகளை பின்தொடர்வதால் சமுதாயம் சிறப்புறும். செழிப்புறும். மனிதனுக்குத் தேவையான சிந்தனைகளை செறிவுடனும் தெளிவுடனும் எடுத்துக் கூறியதனை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. ஞா, தேவநேயப் பாவாணர். *திருக்குறள் தமிழ் மரபுரை.* முதற்பதிப்பு., சென்னை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், திசம்பர் 2000.
2. ஆண்டாள் பிரியதர்ஷினி. *சிறுகதைகள்.* முதல் பதிப்பு., ஏகம் பதிப்பகம், திசம்பர் 2009.
3. க, வெள்ளைவாரணர். *தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்.* முதல் பதிப்பு., மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.
4. புலியூர்க்கேசிகன் மூலமும் உரையும். *புறநானூறு.* முதல் பதிப்பு., சாரதா பதிப்பகம், திசம்பர் 2010.

## REFERENCES

1. Devaneya Bhavanar. *Thirukkural Tamil Tradition*. First ed., Chennai, Sri Hindu Publications, December 2000.
2. Andal Priyadarshini. *Short Stories*. First ed., Ekam Publishing, December 2009.
3. Vellaivaranar. Tholkappiyam Karpiyal Uraivalam. 1st ed., Madurai, Madurai Kamaraj University, 1983.
4. Puliyurkesikan text editor. Purananuru. 1st ed., Saratha Publications, Dec 2010.